www.Padasalai.Net www.TrbTnpsc.com

# Kanchipuram Dt

## இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2025
## பதினொன்றாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி | வரலாறு | மதிப்பெண்கள்:90

### பகுதி – I

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 20x1=20

1. ஹரிஹரர் மற்றும் புக்கர் விஜயநகரப் பேரரசை ஏற்படுத்தும் முன்பாக ________ இடம் பணி செய்தனர்.

   அ) காகதியர் ஆ) ஹொய்சாளர் இ) பீஜப்பூர் சுல்தான் ஈ) யாதவர்

2. பிரபாகர வர்த்தனர் தனது மகள் ராஜ்யஸ்ரீயை ________ என்பவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

   அ)கிரகவர்மன் ஆ) தேவகுப்தர் இ) சசாங்கன் ஈ) புஷ்யபுத்திரர்

3. பொருத்துக:

   i) படைமுகாம் – 1. படை வீடு
   ii) புறக்காவல். படைகள் – 2. தண்டநாயகம்
   iii) தலைவர் – 3. நிலைப்படை
   iv) படைத்தளபதி – 4. படைமுதலி

   அ) 1,3,4,2 ஆ) 4,2,1,3 இ) 2,1,3,4 ஈ) 2,3,1,4

4. 8–ம் நூற்றாண்டில் அரபியர் படையெடுப்பின் போது சிந்து அரசர் ________ ஆவார்.

   அ) ஹஜாஜ் ஆ) முகமது – பின் – காஸிம் இ) ஜெயசிம்ஹா ஈ) தாகிர்

5. ________ "தமிழ் அச்சுப் பதிப்பின் தந்தை" என்று அழைக்கப்படுகிறார்.

   அ) இராபர்டோ டி நொபிலி ஆ) அல்போன்சோ டி அல்புகர்க்
   இ) ஹென்றிக்ஸ் ஈ) பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா

6. இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தியவர் ________

   அ) காரன்வாலிஸ் ஆ) தாமஸ் மன்றோ இ) இராபர்ட் கிளைவ் ஈ) வாரன் ஹேஸ்டிங்ஸ்

7. கீழ்க்காணும் கூற்றுகளை வாசித்து தவறான கூற்றை வெளிக் கொணர்க.

   i) களப்பிரர்கள் சைவத்தை ஆதரித்தனர்
   ii) பல்லவரையும் பாண்டியரையும் களப்பிரர் தோற்கடித்தனர்
   iii) இக்சவாகுகள் வேதவேள்விகளை ஆதரித்தனர்.
   iv) உப்பு வியாபாரிகள் உமணர் என்றழைக்கப்பட்டனர்.

   அ) (i) மற்றும் (ii) ஆ) (ii) மற்றும் (iii) இ) (i) மற்றும் (iii) ஈ) (iii) மற்றும் (iv)

8. அசோகரது தூண்களில் உள்ள பிராமி எழுத்துக்களுக்கு பொருள் கண்டுபிடித்தவர்

   அ) தாமஸ் சாண்டர்ஸ் ஆ) ஜேம்ஸ் பிரின்செப்
   இ) சர் ஜான் மார்ஷல் ஈ) வில்லியம் ஜோன்ஸ்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



9. மெகஸ்தனிஸ் எழுதிய ________ சந்திரகுப்தரின் அரசவையையும், அவரது நிர்வாகத்தையும் விவரிக்கிறது.
அ) இண்டிகா ஆ) முத்ராராட்சசம் இ) அஷ்டத்யாயி ஈ) அர்த்தசாஸ்திரம்

10. அம்பாய்னா படுகொலைக்குக் காரணமானவர்கள் ________
அ) ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனி ஆ) டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி
இ) போர்த்துகீசு கிழக்கிந்தியக் கம்பெனி ஈ) பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி

11. ________ தனது ஆட்சியின் போது ஜிஸியா வரியை மீண்டும் விதித்தார்.
அ) அக்பர் ஆ) ஜஹாங்கீர் இ) ஷாஜஹான் ஈ) ஔரங்கசீப்

12. கீழ்க்கண்டவற்றில் எது சரியாக இணைக்கப்படவில்லை.
அ) மூன்றாம் கோவிந்தன் – வாதாபி
ஆ) ரவிகீர்த்தி – இரண்டாம் புலிகேசி
இ) விஷயம் – ராஷ்டிரகூடர்
ஈ) நம்மாழ்வார் – குருகூர்

13. ________ வேளாண்மை முறையை மேம்படுத்தியதில் முக்கியப் பங்காற்றியது.
அ) இரும்பு ஆ) வெண்கலம் இ) செம்பு ஈ) பித்தளை

14. பழங்கற்காலக் கருவிகள் முதன்முதலில் ________ இல் அடையாளம் காணப்பட்டன.
அ) 1860 ஆ) 1863 இ) 1873 ஈ) 1883

15. தேசிய சமூக மாநாடு ________ முயற்சியால் ஒருங்கிணைக்கப்பட்டது.
அ) ஆ.மு. ரானடே ஆ) தேவேந்திரநாத் தாகூர்
இ) கேசவ சந்திர சென் ஈ) இராமகிருஷ்ண பரமஹம்சர்

16. இந்தோ–கிரேக்கக் கலை மற்றும் சிற்பப் பாணி ________ என்று குறிப்பிடப்படுகிறது.
அ) மதுரா கலை ஆ) காந்தாரக் கலை இ) பாக்கலை ஈ) பாலா கலை

17. கூற்று : சிவகிரி கோட்டைத் தாக்குதல் மற்றும் தற்காப்பு நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பானதாக இருந்தது.
காரணம் : மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் வலுவான அரண்களோடு அது அமைக்கப்பட்டிருந்தது.
அ) கூற்று சரி ; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.
ஆ) கூற்று மற்றும் காரணம் சரியானவை
இ) கூற்று சரி ; காரணம், கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.
ஈ) கூற்று தவறு ; காரணம் சரி.

18. ________ சமணர்களால் நிறுவப்பட்ட ஒரு சமய மையம்.
அ) சரவண பெலகொலா ஆ) மதுரை இ) காஞ்சி ஈ) கழுகுமலை

19. தர்க்கம் குறித்த முதல் முழுமையான பௌத்த நூலை எழுதியவர் ________
அ) திக் நாகர் ஆ) வசுபந்து இ) சந்திரகாமியா ஈ) வராகமிகிரர்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



20. உடையார் அரசர்களுக்கு எதிராக மராத்தியர்களை வெற்றிகரமாக கையாண்ட பின் ________ உண்மையான அரசர் ஆனார்.

அ) ஹைதர் அலி  ஆ) நஞ்சராஜா  இ) நாகம நாயக்கர்  ஈ) திப்பு சுல்தான்

## பகுதி – II

**குறிப்பு: ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**வினா எண் 30க்கு கண்டிப்பாக விடையளி.** 7x2=14

21. ஹோமினின் குறித்து சிறு குறிப்பு வரைக.
22. ரிக் வேதக் கடவுள்கள் குறித்து எழுதுக.
23. நமது ஆய்வுக்குச் சான்றாக உள்ள திரிபிடகங்களை எழுதுக.
24. எதன் காரணமாக மகா அலெக்சாண்டர் போரஸின் அரியணையைத் திருப்பித் தந்தார்?
25. சந்திரகுப்தருக்கும் செலியுகஸ் நிகேடருக்கும் இடையே நிகழ்ந்த போரின் விளைவு என்ன?
26. மதுரா குறித்து பாஹியான் குறிப்பிடுவதைச் சுருக்கமாக எழுதுக.
27. தக்கோலப் போரின் முக்கியத்துவம் குறித்துக் கூறுக.
28. திருப்புறம்பியம் போரைப் பற்றி நீ அறிந்தது என்ன?
29. நாற்பதின்மர் அமைப்பு.
30. ஒரு மையப்படுத்தப்பட்ட அரசின் முக்கிய பண்புகள் யாவை?

## பகுதி – III

**குறிப்பு: ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி.**

**வினா எண் 40க்கு கண்டிப்பாக விடையளி.** 7x3=21

31. அச்சூலியன் சோஹானியக் கருவித் தொழில்நுட்பம் குறித்து எழுதுக.
32. மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகளை ஆய்க.
33. தமிழ்நாட்டில் சமணம் செலுத்திய செல்வாக்கைக் குறிப்பிடுக.
34. விக்ரமசீலா பல்கலைக்கழகம் குறித்துச் சிறுகுறிப்பு தருக.
35. ராக்க்ஷி தங்கடிப் போர் (1565).
36. மத மறுமலர்ச்சியின் உறைவிடமாகத் தென்னிந்தியா விளங்கியதை விளக்குக.
37. "தீன் இலாஹி" பற்றி நீவிர் அறிவது யாது?
38. 1565 ஆம் ஆண்டுக்குப் பிறகு தென்னிந்தியாவில் நிலவிய அரசியல் சூழ்நிலைகளைக் கூறுக.
39. சுவாமி விவேகானந்தர்.
40. பக்தி இயக்கத்தின் விளைவுகளைச் சுட்டிக் காட்டுக.

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி – IV

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **7x5=35**

41. அ) வரலாற்றுக்கு முந்தைய இந்தியா குறித்து விளக்குக.

*(அல்லது)*

ஆ) இந்தியாவில் பழுப்பு மஞ்சள் நிற மட்பாண்டப் பண்பாடுகளைப் பற்றி விவரி.

42. அ) சமணத்தில் ஏற்பட்ட பிளவை விளக்குக.

*(அல்லது)*

ஆ) மௌரியப் பேரரசு பற்றி நாம் அறிய உதவும் சான்றுகளைப் பற்றி விளக்கவும்.

43. அ) களப்பிரர் என்போர் யார்? அவர்கள் குறித்து பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்வதென்ன?

*(அல்லது)*

ஆ) மத்தியத் தரைக்கடல் உலகின் பெருஞ்சக்தியாக ரோமானிய அரசு மேலெழுந்த விதத்தை விவரி.

44. அ) அலாவுதீன் கில்ஜியின் பொருளாதாரச் சீர்திருத்தங்களை விவாதிக்கவும்.

*(அல்லது)*

ஆ) "வருவாய் நிர்வாகத்தில் ஷெர்ஷா அக்பரது முன்னோடி" – விளக்குக.

45. அ) விஜய நகரப் பேரரசின் சமூக மற்றும் பொருளாதார நிலையினை விவரி.

*(அல்லது)*

ஆ) இந்தியாவில் கிறித்தவ மதப்பரப்பாளர்கள் ஆற்றிய பணிகளை விளக்குக.

46. அ) இந்தியாவில் பௌத்தம் வீழ்ச்சி அடைந்ததற்கான காரணங்கள் யாவை?

*(அல்லது)*

ஆ) ***கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் ஐரோப்பிய வணிகத் தளங்களில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.***

1) சென்னை 2) மும்பை 3) கல்கத்தா 4) நாகப்பட்டினம் 5) கோவா

47. அ) பொ. ஆ. 1ஆம் நூற்றாண்டு தமிழ் அரசாட்சிகள் குறித்த விவரங்கள் தருக.

*(அல்லது)*

ஆ) மௌரியப் பேரரசு குறித்து ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் வரைந்து காட்டுக.

***/***

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com